உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. அதன் பங்குத் தொகையாக 4,210 ரூபாய் கொண்டு தொடங்கப்பட்டது. சமீபகாலத்திலே பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களுக்குச் சென்ற காரணத்தால், தற்போது வெறும் 33 உறுப்பினர்கள் மட்டுமே இருக்கும் காரணத்தால், அந்தக் கூட்டுறவுச் சங்கம் நலிவு அடைந்திருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய நடைமுறை மூலதனத்தை அதிகப்படுத்துவதன் மூலம், மேலும் உறுப்பினர்களைச் சேர்த்து, இதுபோன்ற நலிவு அடைந்த சங்கங்களை நாங்கள் விரிவாக்கம் செய்யும்பொருட்டு, வாரியமானது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**357—**

**வேதாரண்யம் தொகுதியில், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிக் கடன்களை ரத்து செய்தல்**

***22761*—திரு. பி. வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1992-93 ஆம் ஆண்டு வேதாரண்யம் தொகுதியில் சில பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கியில் உள்ள கடன் பாக்கி ரத்து செய்யப்படுமா?*

***மாண்புமிகு திரு. கா. பா. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரத்து செய்ய இயலாது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. கவன ஈர்ப்பு.

***(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள சில பாலங்களைப் பதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து.***

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கே. செல்வராஜ்.

*1994 ஏப்ரல் 22]*

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பெரியநாயக்கன்பாளையம் பாலம், மத்தம்பாளையம் பாலம் மற்றும் பிலிச்சிப்பாளையம் பாலம் ஆகிய மூன்று பாலங்களை புதுப்பிக்க வேண்டியது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

***(1) பெரியநாயக்கன்பாளையம் பாலம்:***

இப்பாலம் நாகை-கூடலூர்-மைசூர் சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 364/6-ல் உள்ளது. இப்பாலம் இரும்பு கர்டர்களின் மேல் கான்கிரீட் பலகை கொண்ட பாலமாகும். இப்பாலம் ஒவ்வொரு கண்ணும் 10.50 மீ. நீளத்திற்கு 3 கண்களை கொண்டதாகும். இப்பாலம் ஒரு குறுகிய பாலமாகும். பாலத்தின் ஓடுதள அகலம் 5.50 மீட்டராகும். இப்பாலம் அண்மைக் காலத்தில் பெய்த பெருமழையினால் பாதிக்கப்பட்டு கான்கிரீட் சிலேப்பில் பல இடங்களில் சிறு வெடிப்புகள் ஏற்பட்டு வலுவிழந்து அபாய நிலையில் உள்ளது. ஆதலால் பாலத்தின் இருபுறமும் வேகத் தடைகள் அமைக்கப்பட்டு, எச்சரிக்கைப் பலகைகள் அமைக்கப்பட்டன. மேலும் இப்பாலத்திற்கு இரும்புத் தாங்கிகள் (Steel Grips) உபயோகப்படுத்தி முட்டு கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பாலத்திற்கு தற்காலிகமாக மாற்றுப்பாதை அமைத்து, வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு செய்ய ரூ. 4.00 லட்சமும், பாலத்தை திரும்ப கட்ட ரூ. 50.00 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 54 லட்சம் செலவாகும். அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ள பணித்தொகுப்பு பட்டியலில் (Shelf of Projects) இப்பாலப்பணி இடம் பெற்றுள்ளது.

***(2) மத்தம்பாளையம் பாலம்:***

இப்பாலம் நாகை-கூடலூர்-மைசூர் சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 369/2-ல் உள்ளது. இப்பாலம் ஸ்டீல் கர்டர்களின் மேல் கான்கிரீட் பலகை கொண்ட பாலமாகும். இப்பாலம் 6.0 மீட்டர் நீளத்திற்கு 2 கண்களை கொண்டதாகும். பாலத்தின் ஓடுதள அகலம் 7.50 மீட்டர் ஆகும். அண்மைக் காலத்தில் பெய்த பெரும் மழையினால் இப்பாலம் பாதிக்கப்பட்டு சிலேப்பில் பட இடங்களில் சிறு வெடிப்புகள் ஏற்பட்டு

வலுவிழந்து அபாய நிலையில் உள்ளது. ஆதலால் பாலத்தின் இருபுறமும் வேகத் தடைகள் அமைக்கப்பட்டு எச்சரிக்கை பலகைகள் அமைக்கப் பட்டுள்ளன.

இப்பாலத்திற்கு தற்காலிகமாக மாற்றுப்பாதை அமைத்து வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு செய்ய ரூ 3.00 லட்சமும், பாலத்தினை திரும்ப கட்ட ரூ.27 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 30.00 லட்சம் தேவைப்படும். இப்பணி எவ்வித திட்டத்திலும் இடம் பெறவில்லை.

*(3) பிலிச்சிப்பாளையம் பாலம்:*

இப்பாலம் நாகை-கூடலூர்-மைசூர் சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 371/8-ல் உள்ளது. இப்பாலம் ஸ்டீல் கர்டர்களின் மேல் கான்கிரீட் பலகை கொண்ட பாலமாகும். இப்பாலம் ஒவ்வொரு கண்ணும் 6.00 மீ. நீளத்திற்கு 2 கண்களைக் கொண்டதாகும். பாலத்தின் ஓடுதளம் அகலம் 7.5 மீட்டராகும். அண்மைக் காலத்தில் பெய்த பெருமழையினால் இப்பாலம் பாதிக்கப்பட்டு சிலேப்பில் பல இடங்களில் சிறு வெடிப்புகள் ஏற்பட்டு வலுவிழந்து அபாய நிலையில் உள்ளது. ஆதலால் பாலத்தில் வேகத் தடைகள் அமைக்கப்பட்டு எச்சரிக்கை பலகைகள் வைக்கப் பட்டுள்ளன.

இப்பாலத்திற்கு தற்காலிகமாக மாற்றுப்பாதை அமைத்து வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு செய்ய 3.00 லட்சமும், பாலத்தை திரும்ப கட்டுவதற்கு ரூ.27.00 லட்சமும் ஆக மொத்தம் ரூ.30.00 லட்சம் தேவைப்படும். இப்பணி எவ்வித திட்டத்திலும் இடம் பெறவில்லை.

இருப்பினும் மேற்படி மூன்று பாலங்களும் புதுப்பிக்கப்படவேண்டிய அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு, நிதி வசதிக்கேற்ப பணிகள் மேற்கொள்ள பரிசீலனை செய்யப்படும்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்துள்ள அறிக்கையில், இந்தப் பாலங்களைக் கட்டுவதற்காக ஆய்வுகள் நடத்தியும், மதிப்பீடுகள் செய்தும், பரிசீலனை செய்யப்படும் என்று பதில் உரையில் குறிப்பிட்டு உள்ளார்கள். இந்தப் பாலங்கள் இருக்கின்ற மேட்டுப்பாளையம் சாலை, ஊட்டிக்குச் செல்லுகின்ற, நீலகிரி மாவட்டத்திற்குச் செல்லுகின்ற பிரதான சாலையாகும். தினசரி சுமார் 4,000, 5,000 வாகனங்கள் அதிகமான அளவில் செல்லுகின்ற முக்கிய பிரதான சாலையாக அது இருக்கின்ற காரணத்தால், அந்தச் சாலையில் செல்லுகின்ற வாகனங்கள் முறையாகச் செல்வதற்கு, இந்தப்பாலங்களுக்கு மாற்று வழிச் சாலை அமைத்து, உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ள இந்த நிதி ஆண்டில், பணிகள் துவங்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 22]

முற்பகல் 11.05

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே எல்லா விவரங்களையும் நான் தெளிவாக அவையிலே தெரிவித்திருக்கிறேன். ஆக அதற்குள்ளே நான் போகவிரும்பவில்லை. இந்த மூன்று பாலங்கள் சம்பந்தமாக எல்லா விவரங்களும் அதிலே தரப்பட்டிருக்கிறது. அடுத்து அதற்கான நடவடிக்கைகளை, இந்த வெள்ளக் காலங்களிலே ஏற்பட்ட வெடிப்புகளைச் சீரமைப்பதற்காக என்னென்ன பணிகள் நடைபெற்றது, இப்போது என்னென்ன ஆய்வுகள் செய்திருக்கிறோம் என்பதையெல்லாம் வைத்திருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டிலேயே அவர்கள் எடுக்கமுடியுமா என்று கேட்டார். இந்த ஆண்டு எடுப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே இதற்கு முன்னுரிமை கொடுத்து, வருகின்ற நிதியாண்டுகளிலே இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரிமை கொடுத்து இந்தப் பணிகளைச் செய்வதாகக் கூறினார்கள். நிச்சயம் இந்த மூன்று பாலங்களும் மிகவும் பெரிய பாலங்களாக இருப்பதால் - இப்போதிருக்கின்ற சூழ்நிலையில் ஒரு வாகனம் செல்கின்றபோது இன்னொரு வாகனம் எதிரே வருகின்றபோது நிறுத்திச் செல்ல வேண்டிய ஒரு சிறிய பாலமாகவும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலம் - இந்த ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தப் பாலங்கள் கட்டப்பட்டு, அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களிடமிருந்து நல்லாதரவு எப்போதும் இருக்கின்ற இந்த ஆட்சியில், பாலங்கள் மீண்டும் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில் இல்லா விட்டாலும் அடுத்த நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சருடைய மானியத்தில் இந்தப் பணியைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, நிச்சயம் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நம்முடைய மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர், செல்வி சுலோசனா அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். ஆகவே இதுசம்பந்தமாக அவருடைய வேண்டுகோளின் பேரிலே இதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டுமென்று அரசினிடத்திலேயிருந்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கிறது. அதற்கான பணிகளைச் செய்யும்படி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறோம். ஆகவே வருகின்ற ஆண்டிலே இது சம்பந்தமாக பரிசீலிக்கப்படுவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப அடுத்த ஆண்டு இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.